# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



நகர் ஊரமைப்பு துறை
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம்,
உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர் - திரு.பா.ரமேஷ்குமார், பி.இ., எம்.பி.ஏ.,

ந.க.எண்.2419/2021 தி.மா.3 நாள்.24.09.2021

பொருள் : கட்டிடம் - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - திண்டுக்கல் மாவட்டம் - பழனி வட்டம் - தாதநாயக்கன்பட்டி ஊராட்சி / கிராமம் - சர்வே எண்கள்.26/49-ல் மொத்தம் 11750.00ச.மீ பரப்பளவு கொண்ட மனையிடத்தில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்படும் தரை மற்றும் இரண்டு தளங்கள் (5 Blocks) 264 குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் கட்ட அனுமதி கோரியது - கட்டிட இசைவு வழங்குதல் - குறித்து.

பார்வை :

1) நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், மதுரை கடிதம் ந.க.எண்.1211/உ.பொ(தி)/2021, நாள்.10.08.2021, 12.09.2021 மற்றும் 24.09.2021
2) இவ்வலுவலகக் கடிதம் இதே எண் நாள்.23.08.2021
3) அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள்.04.06.2004
4) அரசாணை எண் (நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020
5) அரசாணை எண்.18, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள்.04.02.2019
6) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7486/2009/பிஏ2, நாள்.16.04.2009
7) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.21075/2009/பிஏ2, நாள்.27.06.2012
8) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12201/2017/பிஏ1, நாள்.22.09.2017
9) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.14227/2017/சிபி, நாள்.14.12.2017
10) அரசாணை (நிலை) எண்.54, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள்.12.03.2020

11) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019/TCP2, நாள்.14.08.2021
12) இவ்வலுவலகக் கடிதம் இதே எண் நாள்.22.09.2021 (நன்னிலைவரி செலுத்தக் கோரியது)
13) நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், மதுரை அவர்கள் கடிதம் நாள்.24.09.2021 (நன்னிலைவரி செலுத்திய நாள். 23.09.2021)
14) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.8557/2019GR, நாள்.08.05.2019
15) அரசாணை (நிலை) எண்.1 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள்.05.01.2021.
16) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.14084/2017/சிபி, நாள்.22.01.2021.

*****

**உத்தரவு**

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், தாதநாயக்கன்பட்டி ஊராட்சி / கிராமம், சர்வே எண்கள்.26/49-ல் மொத்தம் 11750.00ச.மீ பரப்பளவு கொண்ட மனையிடத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்படும் தரை மற்றும் இரண்டு தளங்கள் 'A முதல் O' (5 Blocks) 264 குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டிடத்திற்கு மனை வரை என எல்லையிட்டு ம.வ/ந.ஊ.(தி.மா).எண்.93/2021 என எண்ணிடப்பட்டு மனை வரைபடத்திற்கு ஒப்புதலுடன் கீழ்காணும் தொகுப்பு குடியிருப்பு கட்டுமானம் கட்டிட வரைபடத்திற்கு க.வ/ந.ஊ.(தி.மா).எண்.13அ, 13ஆ, 13இ, 13ஈ, 13உ, 13ஊ/2021 என எண்ணிடப்பட்டு கீழ்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கட்டிட அனுமதி வழங்க தொழில்நுட்ப இசைவு அளிக்கப்படுகிறது.

**Floor Wise Area Dealls :**

| Usage | Ground Floor | First Floor | Second Floor | Stair Head Room | Total FSI Area in sq.m | Total Non-FSI Area in sq.m | Total Buildup Area in sq.m |
|---|---|---|---|---|---|---|---|
| | FSI Area in sq.m | FSI Area in sq.m | FSI Area in sq.m | Area in sq.m | | | |
| Block(A1) | 1033.14 | 1033.14 | 1033.14 | (3.26x5.43x1) | 3099.42 | 17.70 | 3117.12 |
| Block(B1) | 652.74 | 652.74 | 652.74 | (3.26x5.43x1) | 1958.22 | 17.70 | 1975.92 |
| Block(C1) | 542.35 | 542.35 | 542.35 | (3.26x5.43x1) | 1627.05 | 17.70 | 1644.75 |
| Block(D1) | 371.90 | 371.90 | 371.90 | (3.26x5.43x1) | 1115.70 | 17.70 | 1133.40 |
| Block(E1) | 767.52 | 767.52 | 767.52 | (3.26x5.43x1) | 2302.56 | 17.70 | 2320.26 |
| Total | 3367.65 | 3367.65 | 3367.65 | -- | 10102.95 | 88.50 | 10191.45 |

OSR - 1 = 633.86 sq.m

OSR - 2 = 543.48 sq.m

Total OSR ஒதுக்கீடு பரப்பு = 1177.34 sq.m (10.02%)

FSI = 0.860

P.C = 28.66%

No of Two Wheeler Parking Provided = 291 Nos.

Tamil Nadu Combined Development and Building Rules 2019 விதி 11-ன்படி

The Permission granted by the competent authority shall not mean responsibility or Clearance of the Following aspects,

a) Title or Ownership of the site or Building
b) Easement Rights
c) Structural Reports, Structural Drawing and Structural aspects. The Registered Architect or Register Engineer and Structural Engineer on Record as the case may be, shall be responsible for defects in the design.
d) Workmanship. Soundness of Structure and Materials used.
e) Quality of Buildings Services and amenities the construction of Building.
f) Other requirements or Licenses or Clearances required for the site or premises or activity under various other Laws.

சிறப்பு நிபந்தனைகள் :

1) It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
2) As per G.O.(MS)No.18, MA & WS Department date : 04.02.2019 "OSR portion should be earmarked and kept open to sky without any construction with the condition that the open space reservation should be utilized only as a park.
3) However the space may be maintain by the owner concerned subject to the supervison and monitoring of the concern Local Body.
4) Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning permissions is issued subject to the condition that the Applicant / Developer and also the architects / Licensed surveyors and the Structural Engineer Associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
5) "நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகைபத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகாரப்பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல."
6) உத்தேச குடியிருப்பு கட்டுமானத்திற்கு Sewage Treatment Plant, Tail Nadu combined Development and Building Rules 2019-ன்படி உத்தேசிக்கப்பட வேண்டும்.
7) அரசாணை எண்.17, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை UD4(3), நாள்.05.02.2016-ன்படி உத்தேச குடியிருப்புக் கட்டிடத்தின் Terrace தளத்தில் மூன்றில் ஒரு பங்கு அளவிற்கு குறையாமல் சோலார் எனர்ஜி சிஸ்டம் கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும்.

8) மத்திய மற்றும் மாநில அரசு துறைகளிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.
9) தரை வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள OSR-1 ஒதுக்கீடு (5 முதல் 12 எல்லைக்கு உட்பட்டது), OSR-2 ஒதுக்கீடு (5 முதல் 9 எல்லைக்கு உட்பட்டது) மற்றும் அதற்கு செல்லும் உள் சாலைகள் மற்றும் சாலை விரிவாக்கப் பகுதியினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பின்னரே, உள்ளாட்சியால் பிரஸ்தாப உத்தேசத்திற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
10) OSR-1 எனக் குறிப்பிடப்பட்ட மனையிடத்தின் வடபுறப் பகுதி ஆழமான பாறைக் குழியாக அமைவது மற்றும் உத்தேச கட்டுமானங்களுக்கு இடையே அமையும் பாறைக் குழிகள் கெட்டியான மண் / கான்கிரீட் கொண்டு மனித உயிரினங்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் சமப்படுத்தி OSR இடம் உபயோகப்படுத்தப்பட வேண்டும்.
11) பார்வை 14-ல் கண்ட நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளை வழக்கு W.P.(MD).No.8948 of 2019, W.P(MD).No.6912 and 6913 of 2019 உத்தரவு நாள்.12.04.2019 நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள "This Order is passed subject to this outcome of the writ petition W.P.(MD)No.8948 of 2019 என நிபந்தனையிடப்படுகிறது.
12) கட்டிடத்தின் உறுதி தன்மை குறித்து மனுதாரரே முழு பொறுப்பேற்க வேண்டும். தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019 விதி 9(1)(f)-ன்படி Before Commencement of the Building work at site for which building permission has been granted the owner shall within the validity period of building permission give notice to the authority, of his intention to start the work at the building site in Form.2 in annexure –XIV மேலும் விதி 9(2)(b)-ன்படி கட்டிடம் Basement Level – அடைந்தவுடன் Progress Certificate Form-3 சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
13) பார்வை 5-ல் கண்ட அரசாணையின்படி கட்டுமானம், Plinth Level அடைந்தவுடன் தொடர் கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதற்கு முன், Construction Continuance Certificate பெறுவதற்கு மனுதாரர் இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். இச்சான்றிதழ் பெற்ற பின்னரே கட்டுமானப் பணி தொடர்ந்திட வேண்டும். மேலும் கட்டுமானப் பணி முழுவடிவில் முடித்தப் பின்னர் பணி முடிவுச் சான்று (Completion Certificate) பெறப்பட வேண்டும். இச்சான்று பெறப்பட்ட பின் தான் வழக்கமான பயன்பாடு இணைப்புகள் (Regular Utility Connection) பெற இயலும்.

<u>நிபந்தனைகள்:</u>

1) உத்தேச குடியிருப்பு கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2) இட அமைப்பு வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3) மனையில் காட்டப்பட்டுள்ள 1177.34ச.மீ பரப்பளவு கொண்ட திறவிடங்கள் (OSR-1 மற்றும் OSR-2 ஒதுக்கீடு) அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்-138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்-11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியெறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்துதர வேண்டும்.
7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டிக்கு கொசுத் தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைபபு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9) அரசாணை எண்-341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1)துறை, நாள்-03.11.2004 -ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும் போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12) உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water Act)-ன்படி மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்பட வேண்டும்.
13) கட்டிடம் கட்டப்படும் பொழுது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் வயரிங் செய்யப்பட வேண்டும்
14) "The Tamil Nadu Government in G.O.MS.No.112, Housing & Urban Development Department, Dated.22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regularisation & Development) Act – 2016. The Promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or Building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with Real Estate Regulatory Authority".

பார்வை 12-ல் கணட இவ்வலுவலக கடிதத்தில் கேட்பு செய்யப்பட்ட நன்னிலைவரி மற்றும் கூராய்வுக் கட்டணம் பார்வை 13-ல் கண்ட மனுதாரர் கடிதம் மூலம் முழுமையாக பெறப்பட்டுள்ளது.

மேலும், மேற்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் முத்திரையிட்டு ஒப்புதலளிக்கப்பட்ட இரண்டு வரைபடத் தொகுப்புகள் இறுதி ஒப்புதலுக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

கட்டிட வரைபடத்திற்கு இவ்வுத்தரவில் கண்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளின்படி இறுதி ஒப்புதல் வழங்கிட தலைவர், தாதநாயக்கன்பட்டி ஊராட்சி அவர்களை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

உத்தேச தொகுப்பு குடியிருப்பு கட்டிடத்திற்கு இறுதி ஒப்புதல் தொடர்பாக மனுதாரர் தலைவர், தாதநாயக்கன்பட்டி ஊராட்சி அவர்களை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திண்டுக்கல்.
24/09/2021

**இணைப்பு** : ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்கள் (இரண்டு தொகுப்பு)
**பெறுநர்** : தலைவர், தாதநாயக்கன்பட்டி ஊராட்சி,
பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

**நகல்**

1) நிர்வாகப் பொறியாளர்,
தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு
வாரியம், மதுரை கோட்டம், மதுரை - 625 020. } செயலாணைக் கடிதம் மட்டும்
2) தொழில்நுட்ப வைப்பறை (வரைபடங்கள் மற்றும் செயலாணைக் கடித நகல்) - 1 மற்றும் குறுந்தகடு (CD).

தாதநாயக்கன்பட்டி ஊராட்சி திண்டுக்கல் மாவட்டம். பழனி ஊராட்சி ஒன்றியம்

அடுக்கு மாடி குடியிருப்பு கட்டிட வரைபட அங்கீகாரம்

தாதநாயக்கன்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

**திருமதி சி.கண்ணகி**

க.அ.எண்:-05/2021-2022

நாள்: 03/12/21

பொருள்: கட்டிட வரைபட அனுமதி -திண்டுக்கல் மாவட்டம்- பழனி ஊராட்சி ஒன்றியம்- தாதநாயக்கன்பட்டி ஊராட்சி- வடக்கு தாதநாயக்கன்பட்டி கிராமம் சர்வே எண்.26/49ல் உள்ள இடத்தில் 10191.45 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்படும் தரை மற்றும் இரண்டு தளங்கள் வரை (5Block) 264 குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு வரை பட அனுமதி வழங்குவது தொடர்பாக-

பார்வை:

1, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திண்டுக்கல் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.2419/2021/தி.மா. நாள்:-24-09-2021

2, நிர்வாக பொறியாளர் தமிழ்நாடு நகர்புற வாழ்விடம் மேம்பாட்டு வாரியம், மதுரை கோட்டம், மதுரை. அவர்களின் கடிதம் நாள்:- 12/11/2021

---------***--------

ஆணை

பழனி ஊராட்சி ஒன்றியம் தாதநாயக்கன்பட்டி ஊராட்சியில் வடக்கு தாதநாயக்கன் பட்டியில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் சர்வே எண்:-26/49 ல் உள்ள இடத்தில் கட்டப்படும் தரை மற்றும் இரண்டு தளங்கள் வரை (5Block) 264 குடியிருப்புகள் 10191.45 சதுர மீட்டரில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கட்டணம் ரூ.101910/- (ஒரு லட்சத்தி ஆயிரத்தி தொள்ளாயிரத்து பத்து மட்டும்) இரசீது எண்:-34270 நாள்:-03/12/2021ம் நாள் தொகை செலுத்தியதை தொடர்ந்து தரை மற்றும் இரண்டு தளங்கள் வரை (5Block) 264 குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு வரை படம் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

1. இந்த அனுமதி 03/12/2021 முதல் 02/12/2022 தேதி முடிய அமுலில் இருக்கும்.
2. இத்துடன் அங்கீகாரம் செய்து அனுப்பப்பட்டிருக்கும் வரைபடத்தின்படி கட்டிடம் கட்ட வேண்டும்.
3. இப்போது கடட்போகும் கட்டிடத்தில் வேறு எந்த விதமான அபிவிருத்தியோ அல்லது மாறுதலோ செய்து கட்ட வேண்டுமானால் அதற்குறிய சீர்திருத்தப்பட்ட வரைபடங்களுடன் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்ற பிறகு தான் கட்டிடம் கட்ட வேண்டும்.
4. வாயிற்படிகள் வரை கதவு கைபிடிச்சுவர் லெதர் போட்டு பால்கனி முதலியவைகள் சொந்த இடத்திறந்குட்பட்டு இருக்க வேண்டும் ஊராட்சி அல்லது அரசாங்க இடத்தில் யாதொரு எவ்விதமான ஆக்கிரமிப்புகள் செய்யக்கூடாது.
5. வரைபடத்தில் குறிப்பிட்டபடி சுகாதார முறையில் ஊராட்சியின் ஊழியர்கள் வருவதற்கு வசதியாக கழிப்பறை கட்டிக்கொள்ள வேண்டியது.
6. மேற்கூரை தண்ணீரை தகுதியான குழாய்கள் மூலம் ஊராட்சி வாறுகாலில் கொண்டு விடவேண்டும்.
7. சுகாதார சட்டம் 20,35 வது பிரிவின்படி ஊராட்சி மன்றம் தலைவரின் சான்றிதழ் வழங்கிய பின்பு தான் பயன்னடுத்த வேண்டும்.
8. வேலை முடிந்த 15 நாட்களுக்குள் வேலை முடிந்த விபரத்தை தெரிவிக்க வேண்டும் குறிப்பிட்ட காலத்திற்க்குள் வேலை முடியாவிட்டால் காலாவதியாவதற்கு முன்பு உரிய கட்டணம் கட்டி மனுச்செய்து உத்தரவு வழங்கும் முன் எவ்விதமான வேலையும் செய்யக் கூடாது.
9. மழைநீர் சேகரிப்பு அமைப்பு கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும்.
10. இந்த உத்தரவு 1 வருடத்திற்கு மட்டும் செல்லுபடியாகும் கட்டிட கட்டுமானப் பணி நிலுவையில் இருந்தால் மீண்டும் 3 வருடத்திற்கு அனுமதி பெற வேண்டும்.
11. சொத்து தொடர்பான ஆவணங்கள் தவறானது என கண்டறியப்பட்டாலோ வில்லங்கம் ஏதேனும் இருந்தாலோ அல்லது பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுவதாக இருந்தாலோ எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இவ்வுத்தரவு இரத்து செய்யப்படும்.

இணைப்பு:-

1,அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள்-6

தலைவர்
இரண்டாம் நிலை
தாதநாயக்கன்பட்டி ஊராட்சி

பெறுநர்:

உயர்திரு. நிர்வாக பொறியாளர்
தமிழ்நாடு நகர்புற வாழ்விடம்
மேம்பாட்டு வாரியம்,
மதுரை கோட்டம், மதுரை

EXECUTIVE ENGINEER
T.N.U.H.D.B. PID-1, MADURAI



## our services doesn’t just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate